செ.வெ.எண். 38/நவம்பர் நாள் : 28.11.2018

**பத்திரிக்கை செய்தி**

2017 - 2018 ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டத் தொடரில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் தமிழ்நாட்டின் 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் ஆண்டிற்கு ஒரு முறை திறன் முகாம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, தருமபுரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் சார்பில் தருமபுரி மாவட்டத்தில் உள்ள 8 ஊராட்சி ஒன்றியங்களிலும் 2018-2019 நிதியாண்டிற்குள் திறன் பயிற்சி விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட உள்ளது. வருகின்ற 30.11.2018-ஆம் தேதி வெள்ளிக்கிழமையன்று பாலக்கோடு வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் காலை 11.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை திறன் பயிற்சிகள் குறித்து விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட உள்ளது.

இத்திறன் விழிப்புணர்வு முகாமில் வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை, போட்டித் தேர்வில் பங்கு பெறுதல், இலவச திறன் பயிற்சிகள், சுய வேலைவாய்ப்புகள், சுய தொழில் தொடங்க கடன் வசதி, உள்ளிட்ட அரசு திட்டங்கள் பற்றி எடுத்துரைக்கப்பட உள்ளது.

ஆகவே, பாலக்கோடு ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பொதுமக்கள் இத்திறன் மேம்பாட்டு விழிப்புணர்வு முகாமில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**